[28th February 1964

திரு. ம. கமலநாதன் : அமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது தொழு நோய் தொத்து நோய் அல்ல என்று கூறினார்கள். வெண் குஷ்டம்தான் தொத்து நோய் அல்ல. தொழு நோய் கிருமிகள் மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரையில் பரவி இந்த நோய் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகையால் இந்த நோய் கொண்டவர்களை அய்ஸொலேட்டட் ஷெட்டில்தான் வைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதற்கான ஏற்பாடு களைச் செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : முனிஸிபாலிடிகள் ஷெட் போட வேண்டும் என்று முனிஸிபல் கமிஷனருக்கும், பஞ்சாயத்து பிரஸிடெண்டுகளுக்கும் எடுத்துச் சொல்லப்பட்டது. அது பற்றி அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற தகவல் குறித்து இப்போது டைரெக்டர் ஆஃப் பப்ளிக் ஹெல்த் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. எம். எஸ். மணி : தொழு நோய் ஏற்பட்ட பிச்சைக் காரர்கள் மனைவியோடு குடும்பம் நடத்துகிறார்கள். அவர்களுக்கு வாரிசு பிறந்தால் அதற்கும் தொழு நோய் ஏற்படும். ஆகையால் அவர்களைப் பிரித்து வைக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் சபாநாயகர் : நாஸி ஜெர்மனியில் இந்த மாதிரி நடந்தது என்று சொல்லுகிறார்கள்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அது நடைமுறையில் இயலாத காரியம்.

திரு. கே. பொன்னையன் : தொழு நோய் உஷ்ணப் பிரதேசத்தில் தான் வருகிறது, குளிர்ப் பிரதேசத்தில் இல்லை என்று கூறு கிறார்களே, அது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் சபாநாயகர் : இது என்ன கேள்வி ? எல்லோரும் குளிர் நாட்டுக்குப் போய்விடுங்கள் என்று கனம் அங்கத்தினர் சொல்லு கிறார்களா ?

City Compensation Allowance

* 110 *Q.*—SRI M. KALYANASUNDARAM,
SRI V. KRISHNAMOORTHY,
SRI K. CHEEMAICHAMY, and
SRI S. J. RAMASWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to enhance the City Compensatory Allowance given to the employees of the State Government; and

(*b*) if so, the details thereof?

28th February 1964]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The State Government servants have not so far been granted City Compensatory Allowance. The question of enhancing the allowance does not arise.

(b) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், கேள்வியில் ஒரு தவறு இருக்கிறது என்று ஒப்புக் கொள்கிறேன். 'என்ஹான்ஸ்' என்று சொன்னது தவறு. ஆனல், முன்பு சம்பளக் கமிஷன் நியமிக்கப்பட்டு, சம்பள விதங்கள் அமலுக்குக் கொண்டுவரும்போது அன்று இருந்த நிதி அமைச்சர், மத்திய அரசாங்கத்தில் பஞ்சப்படி, மற்றும் என்ன அலவன்ஸ் கொடுக்கிருர்களோ அதே விதத்தில் ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் என்று இந்தச் சபையிலேயே வாக்குறுதி கொடுத்தார்கள். அது மாதிரிப் பார்த்தால், நகரத்தில் வேலை செய்யக்கூடிய நமது அரசாங்க ஊழியர்களுக்கும் இந்த அலவன்ஸ் கொடுக்க வேண்டும். ஆகையால் அந்த அலவன்ஸ் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எனக்குத் தெரிந்த வரையில் முன்பு இருந்த நிதி அமைச்சர் கூறியது பஞ்சப்படி பற்றித்தான். நகரத்திற்கென்று அலவன்ஸ் என்று அவர் கூறவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், பஞ்சப்படி பற்றிய வாக்குறுதியாக இருந்தாலும், மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு உயர்த்தப்பட்ட அளவில் ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கும் உயர்த்தப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: திடீரென்று மத்திய சர்க்கார் உயர்த்தியிருக்கிறது. எங்களுக்குக்கூட இது முன்னதாகத் தெரியாது. அவர்கள் கையில் பணம் இருக்கிறது. அவர்கள் அறிவிக்கிருர்கள். அப்படி அறிவித்தால், நாங்கள் அப்படியே அதைப் பின்பற்றுவது என்ருல், பணம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இதுபற்றி மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி இந்த மாதிரி உயர்த்தும்போது இங்கேயும் உயர்த்த வேண்டியிருக்கும், அவர்களுக்கும் உயர்த்த உதவி அளிக்க வேண்டும் என்று நிதி அமைச்சரிடம்கூடக் கூறினேன். எப்படி ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்குப் பஞ்சப்படி உயர்த்தினல் ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், எய்டெட் ஸ்கூல் ஆசிரியர்கள் உட்பட பொறுப்பு உணர்ச்சியோடு கொடுக்கிருேமோ அந்த மாதிரி மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்திக் கூறியிருக்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சென்னை நகரம் 'ஏ' க்ளாஸ் ஸிட்டியாக மாறவேண்டும் என்று நம் அரசாங்கம் சொன்ன நேரத்தில், அப்படி மாறுவதன் காரணமாக மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய பஞ்சப்படி உயரும் என்ற கருத்திலேயே வலி

யுறுத்தினார்களா? 'ஏ' க்ளாஸ் ஆக மாறிவிட்டபோதும் மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு அதிகப்படி ஸிட்டி காம்பன் ஸேட்டரி அலவன்ஸ் கொடுக்க வேண்டாம் என்று யோசனை சொன்னார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மத்திய அரசாங்கம் தன் ஊழியர்களுக்கு ஒரு பேஸிஸ் வைத்திருக்கிறது. ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கு அதே பேஸிஸ் என்று சொல்ல முடியாது. மாநில அரசாங்கம் சில சலுகைகள் அளித்திருக் கிறது. அந்தச் சலுகைகளை மத்திய அரசாங்கம் அளிக்க வில்லை. நம் பள்ளிகளில் படிக்கிற நம் மாநில அரசாங்க ஊழியர்களின் குழந்தைகளுக்குச் சம்பளம் இல்லை என்று வைத்திருக்கிறோம். மத்திய சர்க்காரில் இருக்கிற ஊழியர் களின் குழந்தைகள் அந்தப் பள்ளிகளில் படித்தால் அவர் களுக்குச் சம்பளம் இல்லை என்று சொல்லக்கூடிய சலுகை இல்லை. நாம் சில சலுகைகள் கொடுக்கிறோம், அவர்கள் கொடுக்கவில்லை. அவர்கள் சில சலுகைகள் கொடுக்கிறார்கள், நாம் கொடுக்கவில்லை. நகரங்களில் 'ஏ', 'பி', 'ஸி' என்ற பாகு பாடு செய்து அந்தந்த நகரங்களில் சில சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதிலும் மத்திய அரசாங்கத்தின் நிலை வேறு. கல்கத்தா போக வேண்டும் என்றால் போக வேண்டும். டில்லிக்குப் போக வேண்டு மென்றால் போக வேண்டும். சென்னையில் இருக்கவேண்டுமென்றால் இருக்கவேண்டும். ஆகையால் அந்த மாதிரி பாகுபாடு செய்திருக் கிறார்கள். அப்படி இருக்கும்போது சென்னை நகரத்தை 'ஏ' என்று போடாமல் 'பி' என்று போட்டது, ஜனத் தொகையை மட்டும் வைத்துக் கொண்டு பார்த்தால் அது சரியல்ல, அது 'ஏ' வகுப்புக்குரியது என்று தெரிவிக்கப்பட்டது. அந்தக் கருத்தை இந்த அரசாங்கமும் ஆதரித்தது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: மாநில அரசிலே பணிபுரியும் ஊழியர்களுக்குப் பஞ்சப்படித் தொகை ஈடுகட்டும் வகையில் மானியம் கோரப்பட்டிருக்கிறது என்று கனம் முதல் அமைச்சர் தெரிவித்தார்கள். அதற்கு மத்திய அரசாங்கத்தினர் என்ன பதில் உரைத்தார்கள் என்று அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நிதி அமைச்சரிடம் கூறி யிருக்கிறேன். இம்மாதிரி படிகளை உயர்த்தும்போது, நாம் இங்கே உள்ள எல்லா சிப்பந்திகளுடைய படியையும் உயர்த்த வேண்டிய நிதி இந்த அரசாங்கத்திடம் இல்லை. இந்த அரசாங்க நிதி நிலைமையைவிட மத்திய அரசாங்க நிதி நிலைமை இடம் கொடுக்கக் கூடியது. முன்பே இந்த மாதிரி அளித் திருக்கிறீர்கள். அதை வைத்து இங்கே உள்ள சிப்பந்தி களுக்கும் உயர்த்தியிருக்கிறோம். ஆகையால் இப்போதும் அளிக்கவேண்டும் என்று சொன்னேன். அவர்கள் தங்கள் சங்கடங்களை எடுத்துச் சொன்னார்கள். இன்னும் முடிவு ஆக வில்லை.

28th February 1964]

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, கணவன், மனைவி ஆகிய இருவர் ஒரே தகுதி பெற்று, மனைவி மத்திய சர்க்கார் நிலையத்திலும் கணவன் மாநில சர்க்கார் நிலையத்திலும் பணி புரிகிற காரணத்தினாலே, மனைவி அதிகமாகப் பணத்தைக் கொண்டுவர, கணவன் குறைவான பணத்தை கொண்டுவர, இப்படிப்பட்ட நிலை இருப்பதினால், குடும்பத்தில் தகராறு உண்டாகிற நிலையில் இருவருக்கும் வருமானம் ஒரே நிலையில் இருக்கக்கூடிய நிலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் உறுப்பினரைப்போல சில கணவன்மார்கள் இல்லாமல், எம்.ஏ., பி.ஏ., பட்டம் பெறாமல் இருக்கிறார்கள். ஆனால், மனைவிமார்கள் அதிருஷ்டவசமாக, கணவன்மார்களைப் போல் அல்லாமல் எம்.ஏ. படித்து பட்டம் பெற்று அதிகச் சம்பளம் வாங்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அதனால் குடும்பத்திலே இக்காரணம்பற்றிச் சச்சரவு இருப்பதற்கு அவசியம் இல்லை.

திரு. செ. மாதவன் : மத்திய சர்க்காரிடம் மாநில சர்க்கார் நிதி உதவி செய்வதற்குக் கேட்டு வற்புறுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குமட்டுமல்லாமல், சில மாநில சர்க்காரும் தங்களுடைய ஊழியர்களுக்குப் பஞ்சப்படியை உயர்த்தியிருக்கிறார்கள். அந்த மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் உதவி தந்துவிட்டதா ? நம்முடைய மாநிலத்திற்கு அவர்கள் ஏன் உதவி தரவில்லை என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் மற்ற மாநிலங்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதைச் சரியாக புரிந்து கொள்ளவில்லை. சில மாநிலங்களில் உயர்த்தியிருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் கருதுவது, முன்பே அதிகப்படுத்தவேண்டியதை இப்பொழுது அதிகப்படுத்தி இருக்கிறார்கள். இப்பொழுது புதிதாக அதிகப்படுத்தியதில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : முதல் அமைச்சர் கூறிய பிரச்னைகள் ஏற்கனவே மத்திய அரசாங்கத்திற்கு முன் மூன்றாவது நிதிக் கமிஷனிடம் மெமோராண்டம் சமர்ப்பிக்கப்பட்டதில் உள்ள விவரங்கள்தான். அப்படியிருந்தும் ராஜ்ய சர்க்காருக்கு இந்தப் பொறுப்புகள் வரும் என்பது தெரிந்து இருக்க வேண்டும். ராஜ்ய சர்க்காரைக் கலக்காமல் மத்திய சர்க்கார் பஞ்சப்படியைக் கூட்டிவிட்டார்கள் என்று மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் இடையே இருக்கிற தகராறைச் சொல்லி திருப்தி செய்துவிட முடியாது. இப்பொழுது வேண்டியது, ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கும், இன்னும் நகராட்சிகளிலும் மற்ற ஸ்தல ஸ்தாபனங்களிலும் வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்கும் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய அதே விகிதாசாரத்தில் பஞ்சப்படி கொடுப்பதற்கு இந்த ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படுமா ? அப்படி எடுக்காவிட்டாலும், கட்டாய சேமிப்பு விதிகள் தளர்த்தப்பட்

டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது நம்முடைய சர்க்கார் இந்தக் கட்டாய சேமிப்புத் திட்டம் பூராவையும் ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கு அமுல் நடத்திக் கொண்டு வருகிறது. குறைந்த வருமானம் உள்ள ஊழியர்களுக்காவது இந்தக் கட்டாயச் சேமிப்பு விதிகள் தளர்த்தப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ராஜ்ய சர்க்கார் ஊழியர்களிடத்தில் கனம் அங்கத்தினர் அக்கறை காட்டுவதுபற்றி நான் பாராட்டுகிறேன். அதே அக்கறை அரசாங்கத்திற்கும் உண்டு என்று உறுதி கூறுகிறேன். அவர்களுக்கு எத்தகைய நிவாரணங்கள் அளிப்பது என்பதைப்பற்றியெல்லாம் அரசாங்கம் தொடர்ந்து பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் விகிதாசாரத்தில் பஞ்சப்படியை உயர்த்துவதற்கு தோராயமாக எவ்வளவு ரூபாய் ஆகும் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தப் புள்ளிவிவரம் இப்பொழுது இல்லை. தோராயமாக சொல்லுவதும் சரியல்ல.

திரு. து. ப. அழகமுத்து : நம்முடைய சோஷலிச பொருளாதாரத்தில் ஒரே தகுதி உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு இரண்டு விதமான சம்பள விகிதம் இருக்கிறது. இந்த ஏற்றத்தாழ்வை ராஜ்ய சர்க்கார் வைத்திருப்பது மிக்ஸட் எகானமி கொள்கையை அனுசரித்தா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சோஷலிஸம் என்றால் என்ன என்பதை இன்னும் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் கனம் அங்கத்தினர் அவர்கள். எதற்கெடுத்தாலும் சோஷலிஸம் என்று சொல்லுவதில் பயன் இல்லை. உத்தியோகஸ்தர்கள் வெவ்வேறு சம்பளம் வாங்குவது சர்க்கார் துறையில் மட்டுமல்ல, தனிப்பட்ட ஸ்தாபனங்களிலும் அம்மாதிரி உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். ஒரே மாநில சர்க்காரில் ஐ.ஏ.எஸ். உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். இல்லாத உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். டெப்யூடி செகரடரிகள் இருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். இல்லாத டெப்யூடி செகரடரிகள் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் சோஷலிஸத்தைக் கொண்டுவந்து காட்டி எல்லோருக்கும் ஒரேமாதிரி சம்பளம் கொடுக்கவேண்டும் என்றால், சோஷலிஸத்தை சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள்தான் அம்மாதிரி கூறுவார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சென்னையில் மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், மாநில சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் இருக்கிறார்கள். அப்படியிருந்தாலும், அவர்கள் எல்லோரும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள், அவர்களுடைய அரசாங்கம் தான் சென்னையைப் பொறுத்தவரையிலும் என்று நாம் கருதுகிறோம். இந்த நகரத்தில் இருக்கிற மத்திய சர்க்கார்

28th February 1964]

உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு சம்பளத்தையும், மாநில சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு சம்பளத்தையும், வாங்கிக் கொடுக்க நம்முடைய அரசாங்கம் முயற்சி செய்கிறது. அது மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கண்ணில் வெண்ணெயும், மாநில சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கண்ணில் சுண்ணும்பும் பூசுவது போல் ஆகாதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: வெண்ணெய், சுண்ணும்பு எல்லாம் பழைய பேச்சு. என்னுடைய கருத்தை நான் முன்பே சொன்னேன். கூடியவரையில் மத்திய அரசாங்க ஊழியர்களும், மாநில அரசாங்க ஊழியர்களும், இரு சாராரும் ஒரே மாதிரி சலுகை பெறவேண்டும் என்பதுதான் கருத்து. இருந்தாலும், அந்தக் கருத்தை அப்படியே நிறைவேற்றுவதில் சங்கடங்கள் இருக்கின்றன என்று சொன்னேன். இந்த மாநிலத்தைப் பொறுத்த மட்டில் ஐ.ஏ.எஸ். டெப்யூடி செகரடரிகள் இருக்கிறார்கள், ஐ.ஏ.எஸ். இல்லாத டெப்யூடி செகரடரிகள் இருக்கிறார்கள். அவர்கள் இருசாராருக்கும் வெவ்வேறு சம்பளம் இருக்கிறது. ஐ.ஏ.எஸ். டெப்யூடி செகரடரிகளுக்கு சில சலுகைகள் இருக்கின்றன, சில சலுகைகள் இல்லை. ஒரு கலெக்டர் ஐ.ஏ.எஸ்-ஆக இருக்கலாம். மற்றொரு கலெக்டர் ஐ.ஏ.எஸ். இல்லாத கலெக்டராக இருக்கலாம். ஒரு சூப்பரின்டென்டெண்டு ஆப் போலீஸ் ஐ.பி.எஸ்-ஆக இருக்கலாம், ஐ.பி.எஸ் இல்லாமலும் இருக்கலாம். இப்படியெல்லாம் இருக்கிறது. கூடியவரைக்கும் சரிப்படுத்துவதற்குப் பார்க்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நான் கேட்ட கேள்வியிலிருந்து ஏதோ ராஜ்ய சர்க்கார் ஊழியர்களிடத்தில் அமைச்சர் அவர்களுக்கு அனுதாபம் இல்லை என்று நான் குறை கூறுவதாக எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை. நானும் அப்படி மனதில் வைத்துச் சொல்லவில்லை. அவர்களுக்கு இருக்கும் அக்கறையைப்பற்றி, அவர்கள் இது விஷயத்தில் தொடர்ந்து எடுத்து இருக்கக்கூடிய முயற்சியைப்பற்றிப் பாராட்டுகிறேன். முயற்சி பலன் அளிக்கிறது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். மத்திய சர்க்கார் இதற்காக நிதி ஒதுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால் திட்டத்திற்கு நாம் 24 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுக்கப் போகிறோம். அப்படியிருக்கும்பொழுது இதை முன்னிட்டாவது நம்முடைய ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கு இந்த ஆண்டிலிருந்து வரக்கூடிய பட்ஜெட்டிலே பஞ்சப்படி உயர்வை அறிவித்துவிட்டு, மத்திய சர்க்காருக்கும், ராஜ்ய சர்க்காருக்கும் இடையே உள்ள தகராறைப் பின்னால் தீர்த்துக் கொள்ளுவதுபற்றி ஆலோசிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பட்ஜெட்டில் என்ன இருக்கிறது என்று இப்பொழுது நான் சொல்ல முடியாது. ஆனால், இந்த விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. எத்தகைய நிவாரணம் எவ்வளவு சீக்கிரம் அளிக்க முடியுமோ அதில் அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது என்று மீண்டும் கூறுகிறேன்.